DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**STC.No.1043/2018**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| Name | : | கண்ணப்பன் |
| Father/Husband Name | : | நரசிங்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 27.01.2026

எதிரி ஆஜர்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் சார்பு ஆய்வாளராக இருந்து பணிநிறைவு செய்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 05.11.2015 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பகலில் பணியில் இருந்தபோது மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் இருந்து தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு சிசிக்சையில் இருந்த சின்னத்தம்பி பேச முடியாத நிலையில் இருந்ததால் அவரது மகன் சாமியையா என்பவரிடம் எழுத்து மூலமாக புகார் ஒன்றை பெற்று 17.00 மணிக்கு காவல்நிலையம் வந்து நிலைய குற்ற எண்.480/2015 இதச பிரிவுகள் 279, 337 ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆக எதிரி தரப்பு வழக்கறிஞர் புகார் குறியீடு செய்யப்படவில்லை என்ற காரணத்தால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு 18.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று அன்பரசன், இளையராஜா, முன்பாக பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்து அவர்களிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.2, அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் விபத்தில் காயம்பட்ட சின்னத்தம்பி மருத்துவமனையில் இறந்துவிட்ட தகவல் கிடைத்ததன்பேரில் வழக்கு கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு மதுரையில் இருந்து 05.11.2015 ம் தேதி காலை 11, 12 மணியளவில் தகவல் கிடைத்தது. நான் தகவல் கிடைத்தவுடன் தேவகோட்டையிலிருந்து பேருந்தில் சென்றேன். தேவகோட்டையிலிருந்து மதுரைக்கு பேருந்தில் சென்றால் 3 மணி நேரம் ஆகும் என்றால் 2.30 மணியிலிருந்து 3 மணி நேரம் ஆகும். புகாரை யார் எழுதினார்கள் என்று தெரியாது. நான் சொல்வதுபோல் எந்த புகாரும் பெறப்படவில்லை என்றும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும் பின்னிட்டு வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு விபத்தில் காயம் ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி சாலை விதிகளை கடைபிடித்துதான் வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றும் இறந்துபோன நபர்தான் சாலையை ஆஜாக்கரதையாக கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரரை மதுரையில் விசாரித்தபிறகு அவர் மதுரையில்தான் இருந்தாரா என்றால் தெரியாது. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.